# இந்திய கடற்படையில் புதிய ஆய்வுக் கப்பல் ‘ஐஎன்எஸ் சந்தாயக்' இணைப்பு


ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் இந்திய கடற்படையில் ‘ஐஎன்எஸ் சந்தாயக்’ ஆய்வுக் கப்பல் இணைக்கப்பட்டது. விழாவில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், கடற்படை தளபதி அட்மிரல் ஆர்.ஹரிகுமார் மற்றும் அதிகாரிகள். படம்: பிடிஐ

**விசாகப்பட்டினம்:** ‘ஐஎன்எஸ் சந்தாயக்’ ஆய்வுக் கப்பல் இந்திய கடற்படையில் நேற்று முறைப்படி இணைக்கப் பட்டது.

இந்திய கடற்படைக்காக 4 ஆய்வுக் கப்பல்களை கொல்கத்தாவில் உள்ள ‘கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் இன்ஜினீயர்ஸ்’ நிறுவனம் கட்டி வருகிறது. இதில் முதல் கப்பலான 'ஐஎன்எஸ் சந்தாயக்' கடந்த ஆண்டு டிசம்பர் 4-ம் தேதி இந்திய கடற்படையிடம் வழங்கப்பட்டது. இதையடுத்து துறைமுகம் மற்றும் கடலில் விரிவான சோதனை நடைபெற்றது. இந்நிலையில் இந்திய கடற்படையில் 'ஐஎன்எஸ் சந்தாயக்' நேற்று முறைப்படி இணைக்கப்பட்டது. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் கடற்படை தளத்தில் நடைபெற்ற விழாவில், மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இதனை கடற்படையில் இணைத்து வைத்தார். கடற்படை தளபதி அட்மிரல் ஆர்.ஹரிகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

**80 மீனவர்கள் மீட்பு**: விழாவில், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசும்போது, “இந்திய கடற்படை மிகவும் வலிமை அடைந்துள்ளது. இந்தியப் பெருங்கடல் மற்றும் இந்திய பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்புக்கு எதிரான பிரச்சினைகளுக்கு முதல் பதிலடி தருபவராக நாம் மாறியுள்ளோம். சமீபத்தில் நாம் 80 மீனவர்களை கடற்கொள்ளையர்களிடம் இருந்துமீட்டோம். இது இந்திய கடற்படையின் விருப்பம் மற்றும் வலிமையை காட்டுகிறது” என்று தெரிவித்தார்

## மின்வாரிய களப்பணிகளை கண்காணிக்க புதிய செயலி: சோதனை முறையில் பயன்படுத்த ஒப்புதல்




**சென்னை:** மின்வாரிய களப்பணிகளை கண்காணிப்பதற்கான செல்போன் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஐடி பிரிவு தலைமைப் பொறியாளர், மின்வாரிய அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் தாழ்வழுத்த மின் இணைப்பு பிரிவில் களப்பணிகளை மேற்கொள்வோருக்காக ஆண்ட்ராய்டு கைபேசி செயலி (எப்எஸ்எம்) உருவாக்கப்பட்டுள்ளது.

**7 சேவைகள்:** இதில், மின் இணைப்பை துண்டித்தல், மீண்டும் இணைப்பு வழங்குதல், பழுதான மீட்டர்களை மாற்றுதல், புதிய மின் இணைப்பு வழங்குதல்,

மின் நுகர்வோர் அளிக்கும் புகார்கள் உள்ளிட்ட 7 சேவைகள் தொடர்பான தரவுகள், புகைப்படங்களை பதிவு செய்வதோடு, சரிபார்க்கவும் முடியும்.

இந்த செயலி மூலம் களப்பணியாளர்களுக்கான பணிகளை உதவிப் பொறியாளர் ஒதுக்கீடு செய்ய முடியும். மேலும், மின் நுகர்வோரின் புகார்கள், சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளருக்கு நேரடியாக சென்று சேர்ந்துவிடும். இந்த செயலியை சோதனை அடிப்படையில் பயன்படுத்த மின்வாரியத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, 12 வட்ட அலுவலகங்களில் உள்ள பணியாளர்களுக்கு வழங்கும் வகையில் செயலியின் ஏபிகே மின்னஞ்சல் வாயிலாக சம்பந்தப்பட்ட மேலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இதை பயன்படுத்தும்போது தொழில்நுட்ப ரீதியாக ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால் உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மீண்டும் மாநில அந்தஸ்து கோரி லடாக் மக்கள் போராட்டம்



தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி மேற்கொண்ட மக்கள்

**லே:** மீண்டும் மாநில அந்தஸ்து உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி லடாக் மக்கள் போராட்டம் மேற்கொண்டனர். சனிக்கிழமை அன்று அங்கு முழு

அடைப்பு காரணமாக கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாகவும் சென்றனர்.

அரசியலமைப்பு பாதுகாப்பு, கலாச்சார அடையாளம், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மீண்டும் மாநில அந்தஸ்து ஆகியவற்றைக் வலியுறுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் லே நகரில் கூடி போராட்டம் மேற்கொண்டனர். லே அமைப்பு மற்றும் கார்கில் ஜனநாயகக் கூட்டணி இந்த போராட்டத்தை ஒருங்கிணைத்தது.

சீனாவை ஒட்டிய பகுதியில் வசித்து வரும் லடாக் பகுதியை சேர்ந்த மக்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றனர். லடாக் மக்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய உள்துறை அமைச்சகம் உயர்மட்ட குழுவை அமைத்துள்ளது. உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் தலைமையிலான இந்தக் குழு, தனது முதல் கூட்டத்தை கடந்த ஆண்டு டிசம்பர் 4-ம் தேதி நடத்தியது. அடுத்த கூட்டம் வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக அங்கு மக்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவ்வப்போது போராட்டம் மேற்கொள்வது வருவது வழக்கமாக உள்ளது.

கடந்த 2019, ஆகஸ்ட் 5-ம் தேதி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்துப் பிரிவான 370-ம் பிரிவை மத்திய அரசு நீக்கி ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவற்றை யூனியன் பிரதேசங்களாக அறிவித்தது. அதே ஆண்டு அக்டோபர் 30-ம் தேதி நள்ளிரவில் அதிகாரபூர்வமாக ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களாக மாறியது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் யுபிஐ அறிமுகம்: ஈஃபிள் டவரை காண ரூபாயில் கட்டணம்




**பாரீஸ்:** பணப் பரிவர்த்தனை தொழில்நுட் பத்தில் இந்தியாவின் யுபிஐ கட்டமைப்பானது உலக அளவில் முன்னுதாரணமாக திகழ்கிறது. இந்நிலையில், தற்போது பிரான்ஸ்நாட்டில் யுபிஐ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, பிரான்ஸின் முக்கியமான சுற்றுலா தளங்களில் ஒன்றான ஈஃபிள் டவரில்யுபிஐ பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி, ஈஃபிள் டவரை காணச் செல்லும் இந்தியப் பயணிகள், அதற்கான கட்டணத்தை தங்கள் மொபைலில் உள்ள யுபிஐ செயலி மூலம் ரூபாயிலேயே செலுத்த முடியும்.

மத்திய அரசு 2016-ம் ஆண்டுயுபிஐ கட்டமைப்பை நடைமுறைப்படுத்தியது. இந்தியாவில் தற்போது பெரிய வணிக வளாகங்கள்முதல் சிறிய பெட்டிக்கடைகள் வரையில் யுபிஐ பரிவர்த்தனைபிரதானமாக மாறியுள்ளது. இந்நிலையில், வெளிநாடுகளுக்கும் யுபிஐ மூலம் பணப்பரிவர்த்தனை செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், மலேசியா, நேபாளம், பூடான் உள்ளிட்ட நாடுகளில் யுபிஐ மூலம் பரிவர்த்தனை செய்வதற்கான

EVA STALIN IAS ACADEMY

வாய்ப்பை மத்திய அரசு உருவாக்கியுள்ள நிலையில், தற்போது பிரான்ஸிலும் யுபிஐ அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரான்ஸில் உள்ள இந்திய தூதரகம் அதன் எக்ஸ் பக்கத்தில், "யுபிஐ பயன்பாட்டை சர்வதேச அளவில் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற பிரதமர் மோடியின் இலக்கின்படி, குடியரசுதின கொண்டாட்டத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை அன்றுபாரீஸில் உள்ள ஈஃபிள் டவரில்யுபிஐ அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது" என்று தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் உள்ள சுற்றுலா மையங்களில், இந்தியபயணிகளுக்கு பயன்படும் வகையில் யுபிஐ பரிவர்த்தனையை நடைமுறைப்படுத்த மத்திய அரசு தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

**சிலி நாட்டில் பயங்கர காட்டுத் தீ: உயிரிழந்தோர் எண்ணிக்கை 112 ஆக உயர்வு**



சிலி நாட்டில் பயங்கர காட்டுத்தீ

**வல்பரைசோ:** தென் அமெரிக்க நாடான சிலியில் பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நூற்றுக்கணக்கானவர்களைக் காணவில்லை என்று அந்நாட்டு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சிலி நாட்டின் வல்பரைசோ (Valparaiso) பகுதியில் உள்ள வனப்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் திடீரென காட்டுத் தீ ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான வீடுகள் பற்றி எரிந்து தீக்கிரையாகியுள்ளன. உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மீட்புப் பணிகள் மும்முரமாக்கப்பட்டிருக்கிறது.

எனினும், இந்தக் கொடிய காட்டுத் தீயில் 1931-ல் நிறுவப்பட்ட பிரபல தாவரவியல் பூங்கா ஒன்று ஞாயிற்றுக்கிழமை தீக்கிரையானது. சிலியில் ஏற்பட்டிருக்கும் காட்டுத் தீயானது, மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளையும் பாதித்துள்ளது. சிலியின் கரையோர நகரங்களில் புகை சூழ்ந்ததால் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது, முக்கிய பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புகை மற்றும் தீப்பிழம்புகள் வினா டெல் மார் (Viña del Mar) என்ற நகரைச் சுற்றியுள்ள சுற்றுப்புறங்களை சூழ்ந்தன. சில குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளில் சிக்கிக்கொண்டனர். அதே நேரத்தில் வினா டெல் மார் (Viña del Mar) என்ற நகரைச் சுற்றியுள்ள பகுதியில் 200 பேர் காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை, அந்நாட்டு ஜனாதிபதி கேப்ரியல் போரிக் இந்த சம்பவம் குறித்து பேசுகையில், "தீயினால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய நாட்கள் தேசிய துக்க நாட்களாக அனுசரிக்கப்படும். இறப்பு எண்ணிக்கை அதிகரிக்க

EVA STALIN IAS ACADEMY

கூடும்" என்று அறிவித்தார். வல்பரைசோ பிராந்தியத்தின் ஆளுநர் ரோட்ரிகோ முண்டாகா, வினா டெல் மார், குயில்பூ, வில்லா அலெமனா மற்றும் லிமாச்சே ஆகிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்படுவதாக ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். இதனால் அதிகாரிகள் தீயை அணைப்பதில் கவனம் செலுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் இது குறித்து கூறியிருப்பதாவது, "தென் அமெரிக்க நாடான சிலியில் ஏற்பட்ட பயங்கர காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்துள்ளது. 32 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார். சிலியில் பிப்ரவரி 2023 ஆண்டு ஏற்பட்ட காட்டுத்தீயில் 4,00,000 ஹெக்டேர் நாசமாகியது. அதில் 22க்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வெப்பமயமாதல் காரணமாக, காட்டுத் தீ போன்ற இயற்கை சீற்றங்கள் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

**Global Corruption Index 2023: சர்வதேச ஊழல் குறியீட்டு பட்டியலில் 93-வது இடத்தில் இந்தியா**



உலகளாவிய ஊழல் போக்குக் குறியீட்டின் (Global Corruption Perception Index) 2023 ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை, ‘டிரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல்’ அமைப்பு வெளியிட்டுள்ளது. இவ்வமைப்பு கடந்த 30 ஆண்டுகளாக, 'சட்டத்தின்படி ஆட்சி செய்து ஊழலை எதிர்த்துப் போராடும்' நாடுகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு ஊழல் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. ஊழலற்ற நிர்வாகம் மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளின் அடிப்படையில் உலக நாடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும். 100 மதிப்பெண்களுக்கு நாடுகள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் அவற்றின் வரிசை அமைகிறது.

2023 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் மொத்தம் 180 நாடுகள் இடம்பெற்றுள்ளன.மொத்தம் 180 நாடுகளில் எடுக்கப்பட்ட ஆய்வில், இந்தியா பெற்றுள்ள மதிப்பு 100-க்கு 39, பிடித்துள்ள இடம் 93. கடந்த 2022 ஆம் ஆண்டில் இந்தியா இந்தப் பட்டியலில் 85-வது இடத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நமது அண்டை நாடான பாகிஸ்தான், 29 மதிப்பெண்களுடன் 133-வது இடத்தில் இருக்கிறது. 43 மதிப்பெண்கள் பெற்று சீனா 76-வது இடத்தைப் பிடித்திருக்கிறது.

**முதல் மூன்று நாடுகள்:** பட்டியலில் 90 மதிப்பெண்கள் பெற்ற டென்மார்க், தொடர்ந்து 6-வது ஆண்டாக ஊழலை எதிர்க்கும் முதல் நாடாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து, 87 மதிப்பெண்களுடன் பின்லாந்து இரண்டாவது இடத்தையும், 85 மதிப்பெண்களுடன் நியூசிலாந்து மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. நார்வே, சிங்கப்பூர், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, நெதர்லாந்து, ஜெர்மனி, லக்ஸம்போர்க் நாடுகள் ஊழலை எதிர்க்கும் நாடுகளில் டாப் 10 வரிசையில் உள்ளன. அமெரிக்கா 69வது இடத்தில் உள்ளது.

**உள்நாட்டுப் போர்களும் ஊழலும்!** இந்தப் பட்டியலில் சோமாலியா கடைசி இடத்தில் இருக்கிறது. சோமாலியாவைத் தொடர்ந்து வெனிசுலா, சிரியா, தெற்கு சூடான், ஏமன் ஆகிய நாடுகள் ஊழல் மலிந்த நாடுகளாக உள்ளன. உள்நாட்டுக் கலவரங்கள் இதற்கு முக்கியக் காரணமாக இருக்கிறது. தென் கொரியா (63), அர்மேனியா (47), வியட்நாம் (41), மாலத்தீவு (39), அங்கோலா (33), உஸ்பெகிஸ்தான் (33) ஆகிய நாடுகள்இந்தப் பட்டியலில் முன்னேற்றம்

கண்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் இருப்பவை நாடுகள் 100-க்கு பெற்ற மதிப்பெண். எல் சால்வடார் (31), ஹோண்டுராஸ் (23), லைபீரியா (25), மியான்மர் (20), நிகாராகுவா (17), இலங்கை (34), and வெனிசுலா (13). அர்ஜென்டினா (37), ஆஸ்திரியா (71), போலந்து (54), துருக்கி (34) ஆகிய நாடுகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

## 2024 முதல் 2031 வரை இந்திய பொருளாதாரம் சராசரியாக 6.7% வளரும்: கிரிஸில் தகவல்




**புதுடெல்லி:** இந்தியா இப்போது உலகின் 5-வதுபெரிய பொருளாதார நாடாக உள்ளது. 2027-ம் ஆண்டு 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தைக் கொண்டு 3-வது பெரிய பொருளாதார நாடாக மாறும் என்றும் 2031-ல் இந்தியாவின் பொருளாதாரம் 7 டிரில்லியன் டாலராக உயரும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

இந்நிலையில், 2024 முதல் 2031 வரையில் ஆண்டுக்கு சராசரியாக 6.7 சதவீதம் வளர்ச்சி காணும் என்று கிரிஸில் தெரிவித்துள்ளது. இதற்கு அரசின் மூலதன முதலீடு முக்கியக் காரணியாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

கரோனா ஊரடங்கால் உலக நாடுகளின் பொருளாதாரம் சரிவுக்கு உள்ளானது. ஆனால், இந்தசரிவிலிருந்து இந்தியா விரைவிலேயே மீண்டெழுந்தது. ரஷ்யா - உக்ரைன் போர், விநியோகச் சங்கிலி நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளால் சர்வதேச அளவில் பொருளாதார மந்தநிலை காணப்பட்டது. எனினும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்டு இருப்பதாக சர்வதேச செலாவணி நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் தெரிவித்தன.

இந்நிலையில், தற்போது காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் நீடித்துவருகிற நிலையில் கச்சா எண்ணெய், சரக்குப் போக்குவரத்து உள்ளிட்டவற்றில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்தச் சூழலை இந்தியா கவனமாக கையாள வேண்டும் என்று கிரிஸில் தெரிவித்துள்ளது.

## ‘Ask QX’ சாட்ஜிபிடிக்கு போட்டியாக அறிமுகம் | தமிழ் உட்பட 12 இந்திய மொழிகளில் பயன்படுத்தலாம்




**சென்னை:** தமிழ் உட்பட 12 மொழிகளில் இயங்கும் ‘Ask QX’ எனும் ஜெனரேட்டிவ் ஏஐ அசிஸ்டன்ட் டூல் அறிமுகமாகி உள்ளது. இது சாட்ஜிபிடிக்கு போட்டியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.

கடந்த 2022-ம் ஆண்டின் இறுதி முதல் உலக மக்கள் மத்தியில் ஜெனரேட்டிவ் ஏஐ பயன்பாடு அதிகரித்து காணப்படுகிறது. இதற்கு சாட்ஜிபிடி ஜெனரேட்டிவ் ஏஐ சாட்பாட் தான் காரணம். அதையடுத்து பல்வேறு சாட்பாட்கள் அறிமுகமாகின.

டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்தி வரும் மக்கள், இதன் ஊடாக தங்களுக்கு வேண்டிய கேள்விகளை கேட்டு பதிலை அறிந்து கொள்கின்றனர். அதோடு போட்டோ, ஆடியோ போன்றவற்றையும் பயனர்கள் தங்களது கற்பனைக்கு ஏற்ப ஏஐ சாட்பாட்கள் மூலம் உருவாக்கலாம்.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் 'Ask QX' எனும் ஜெனரேட்டிவ் ஏஐ அசிஸ்டன்ட் டூல் அறிமுகமாகி உள்ளது. சுமார் 100 மொழிகளில் பயனர்கள் இதனோடு தொடர்பு கொண்டு, தங்களுக்கு வேண்டிய தகவல்களை பெற முடியும். இதில் தமிழ் உட்பட இந்தியாவின் 12 மொழிகளும் அடங்கியுள்ளன. கட்டணமில்லா மற்றும் சந்தா கட்டணம் செலுத்தி என பயனர்கள் இதனை பயன்படுத்த முடியும். இப்போதைக்கு இதில் டெக்ஸ்ட் வழியில் பேசலாம். இணையதளம் மற்றும் மொபைல் செயலி மூலம் இதனை பயன்படுத்தலாம்.

QX லேப் ஏஐ எனும் நிறுவனம் இதனை வடிவமைத்துள்ளது. சாட்ஜிபிடி போலவே இதையும் பயன்படுத்தலாம். க்ரியேட்டிவ், ஸ்டேண்டர்ட் மற்றும் ஃப்ரொபஷனல் என மூன்று வகையில் இதை பயன்படுத்த முடியும். விரைவில் இதன் ஊடாக ஆடியோ, வீடியோ மற்றும் போட்டோவை அடிப்படையாகக் கொண்டு பயனர்கள் தங்களுக்கு வேண்டிய தகவலை பெற முடியும். அதற்கான அம்சங்கள் அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STA